# திராவிடத்தால் வாழ்கிறோம்

994

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

33

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

1965-இல் கலைஞர் கதை, திரைக்கதை, வசனம் எழுதி, எஸ்.எஸ்.ஆர்., விஜயகுமாரி, அஞ்சலிதேவி, கே.ஏ.அசோகன் போன்றோர் முக்கிய வேடமேற்று நடித்து வெளிவந்த திரைப்படம், பூமாலை. தயாரிப்பு, மேகலா பிக்சர்ஸ் சார்பில் முரசொலி மாறன். இயக்கம், ப.நீலகண்டன்.



கலைஞரின் திரைக்கதை வசனத்தில், பெண்கள் நலன் பேசிய திரைப்படங்களில் பூமாலையும் முக்கியமான ஒன்று. 1960 காலத் தமிழ்ச் சூழலில் பெண்கள் பட்ட துயரங்களை எடுத்துக்காட்டி, அவர்களது துயர் துடைக்கப்பட வேண்டும் என்று கொள்கை முழக்கம் செய்வதுபோல, தயாரிக்கப்பட்ட படம். படத்தின் தொடக்கத்தில், திரையில் தோன்றும் கலைஞர், தனது நோக்கத்தினைக் கூறவும் செய்கிறார்.

திராவிட இயக்க சமத்துவக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதற்காகவே, கதை திரைக்கதை வசனத்தை எழுதியதுடன், படத்தைத் தயாரிக்கவும் செய்தவர்கள் வேறு ஒருவரும் தமிழ்த் திரை உலகில் இல்லை என்றே கூற வேண்டும். மக்களின் (பெண்களின்) நல்வாழ்க்கையின் மீது தீராக் காதல் கொண்ட ஒருவரால் மட்டுமே இப்படிச் செய்ய முடியும்.

### படத்தின் கதை:

பூமாலை (ஆர்.விஜயகுமாரி) கல்லூரிப் படிப்பை முடித்து ஊர் திரும்புகிறாள். தாயை இழந்த அவளை, தந்தையும் (டி.எஸ்.முத்தையா) அண்ணன் ஆனந்தனும் (கே.ஏ.அசோகன்) வரவேற்கின்றனர். மற்றொரு புறம், தாய் தந்தையை இழந்த பணக்கார இளைஞன் சுந்தரம் (எஸ்.எஸ்.ஆர்.) மற்றும் அவனது அக்காள் மரகதம் (அஞ்சலி தேவி) மாளிகையில் வசித்து வருகின்றனர். அவர்களது கார் டிரைவர், சிட்டு (நாகேஷ்). சுந்தரத்தின் நண்பன் ரவி பகுத்தறிவாளன், சுயமரியாதை இயக்கத்துக்காரன். நாடகம், இலக்கியம், மேடைப்பேச்சு என்று இயங்கக்கூடிய கொள்கையாளன் மற்றும் சுந்தரத்தின் நிறுவனத்தில் பணியாற்றும் ஆனந்தன் (கே.ஏ.அசோகன்) ஆகியோரைச் சுற்றியே கதை நகர்கிறது.

ஒருநாள், தனது நண்பன் மோகனின் திருமணத்திற்காக சுந்தரம் மங்களபுரம் என்ற ஊருக்குப் போகிறான். அதேபோல தனது நெருங்கிய தோழி லீலாவின் திருமணத்தை முன்னிட்டு, அங்கு பூமாலையும் வருகிறாள். தோழி, அவளை விருந்தினர் மாளிகையில் தங்க வைக்கிறாள். திருமண வீட்டில் தனது நண்பர்களின் வற்புறுத்தலால் சுந்தரம் மது அருந்திவிட்டு, அங்கு நடைபெறும் நளினாவின் (ராஜஸ்ரீ) நடனத்தைப் பார்க்கிறான். அதனால், அவனுக்குக் காமவெறி தலைக்கேறுகிறது.

திருமணம் முடிந்து, இரவு தோழிகள் ஊர் திரும்ப, பூமாலை மட்டும் விருந்தினர் அறையில் தனித்து உறங்குகிறாள். நளினா விருந்தினர் அறையில் தங்கியுள்ளதாகக் கேள்விப்பட்டு, அவளைத் தேடி அங்கு வரும் சுந்தரம், குடிபோதையில் பூமாலையை வன்புணர்வு செய்துவிட்டுப் போய்விடுகிறான். இருட்டில் தன்னை பலாத்காரம் செய்தவன் யாரென்று தெரியாத பூமாலை, அழுதுகொண்டே ஊர் திரும்புகிறாள்.

மறுநாள் பொழுது விடிந்ததும் போதை தெளிந்தவுடன், சுந்தரம் மனம் வருந்துகிறான்.



படங்கள் உதவி : ஞானம்

**பூமாலை ; புழுதியில் வீசப்படுவதற்கல்ல, புத்தி புகட்டுவதற்கு!**

நடனமாடிய நளினா, இரவே ஊருக்குப் போய்விட்டாள் என்பதையறிந்து அப்படியானால், தான் பலாத்காரம் செய்தது யாரை என்று அறிய, விருந்தினர் அறைக்குத் தேடிப் போகிறான். அங்கு யாரும் இல்லாமல் அறை அலங்கோலமாகக் கிடப்பது கண்டு அதிர்ந்து, ஊர் திரும்பி, தனது நண்பன் ரவியிடம் நடந்தவற்றைச் சொல்லி வருந்துகிறான்.

பூமாலை கர்ப்பமடைகிறாள். தனது தந்தையிடமும் தனயனிடமும் தனக்கு நேர்ந்த கொடுமையைச் சொல்கிறாள். அதிர்ச்சியடையும் தந்தை, பூமாலை மீது குற்றமில்லை. அதனால் அண்ணனும் தங்கையும் குடும்பக் கௌரவத்தைக் காப்பாற்றுவதாகச் சத்தியம் செய்யுங்கள் என்று சொல்லி, சத்தியம் பெற்றுக்கொண்டு இறந்துபோகிறார்.

ஆனந்தன், தனது தங்கையை வெளியூர் மருத்துவமனையில் சேர்த்து வைத்தியம் பார்க்கிறான். குழந்தை பிறந்தவுடன் சென்னைக்கு அழைத்துச்செல்லும் வழியில், திருநீர்மலைக்குப் போய் சாமி கும்பிட்டுவிட்டு வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லி, பூமாலையையும் குழந்தையையும் ஆனந்தன் அழைத்துப் போகிறான்.

கோயிலில் குழந்தையைப் போட்டுவிட்டு, தனது தங்கையை வலுக்கட்டாயமாக ஆனந்தன் அழைத்துச்செல்கிறான். தனது அண்ணனின் கையைத் தட்டி விட்டுவிட்டு, பூமாலை ஓடி வந்து குழந்தையைத் தேடுகிறாள். அதற்குள் யாரோ குழந்தையைத் தூக்கிச் சென்றுவிடுகின்றனர். பூமாலை கண்ணீர் விட்டுக் கதறியபடி வீடு திரும்புகிறாள்.

நான்கு மாத காலம் தீர்த்த யாத்திரைக்குச் சென்று, பல்வேறு கோயில்களையும் கண்டுவிட்டு திருநீர்மலைக்கு வரும் மரகதம், கோயிலில் அநாதையாகக் கிடந்த குழந்தையை எடுத்துக்கொண்டு தனது வீட்டுக்கு வந்து, தனது தம்பி சுந்தரத்திடம் காட்டி, 'நாமே குழந்தையை வளர்ப்போம்' என்கிறாள். ஆனால், குழந்தையுடன் ஊர் திரும்பிய மரகதத்தைப் பற்றி தெருப் பெண்கள் தவறாகப் பேசுகின்றனர். சுந்தரத்தைக் காண வரும் நண்பன் ரவியுடன் மரகதத்தையும் இணைத்துத் தவறாகப் பேசுகின்றனர். இதனால், மரகதம், ரவியிடம் 'இனி வீட்டுக்கு வர வேண்டாம்' என்று கூறிவிடுகிறாள்.

மேலும், மரகதத்தின் நடத்தை பற்றிய அவதூறுகளால் சுந்தரத்திற்குப் பெண் தர எல்லோரும் மறுக்கின்றனர். ஆனந்தன் தனது தங்கை பூமாலையை வற்புறுத்தி, சுந்தரத்திற்குத் திருமணம் செய்து வைக்கிறான். ஆனால் பூமாலை, சுந்தரத்திடம் உறவாட முடியாமல் விலகிப் போகிறாள். சில நாட்களுக்குள் மரகதம் வளர்த்துவருவது தனது குழந்தைதான் என்பதை அறியும் பூமாலை, மகிழ்ச்சி அடைகிறாள்.

குழந்தையைப் பராமரிக்கும் சாக்கில் சுந்தரத்துடன் உறவாடாமல் பூமாலை தவிர்க்கிறாள். சுந்தரத்திற்குக் கோபம் வருகிறது. இதற்கிடையே ஒரு நாள், குழந்தை தன்னுடையதுதான் என்கிற உண்மையையும் தனக்கு நடந்த கொடுமையையும் தனது அண்ணி மரகதத்திடம் பூமாலை சொல்லி விடுகிறாள். முதலில் கோபம் கொள்ளும் மரகதம், தனது தம்பியின் நலனுக்காகவும் குடும்பக் கௌரவத்திற்காகவும் பூமாலையின் மீதான இரக்கத்தினாலும் மன்னித்து ஏற்றுக்கொண்டு, தனது தம்பியுடன் வாழவைக்க முயல்கிறாள்.

### வெளிப்படும் உண்மைகள்

பூமாலையால் சுந்தரத்துடன் வாழ முடியாமைக்குக் குழந்தை தடையாக இருப்பதால், மரகதம் குழந்தையைத் தூக்கிச்சென்று ரவியிடம் கொடுத்துவிடலாம் என்றெண்ணிச் செல்கிறாள். ஆனால், ரவி நாடகம் போடுவதற்காக வெளியூர் சென்றுவிடுவதால், குழந்தையை பூமாலையின் அண்ணன் ஆனந்தனிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பி வருகிறாள். அதற்குள் மரகதம் ரவியுடன் ஓடிப்போய்விட்டதாக ஊரார் பேசுகின்றனர். அதனை நம்பி, சுந்தரமும் தனது அக்காளை வேசி எனத் திட்டுவதைக் கேட்கும் மரகதம், மனம் வெறுத்துப் போய்... ஆற்றில் குதித்துத் தற்கொலை செய்துகொள்கிறாள்.

ரவியின் நாடகக் குழுவினர், ஆற்றில் இருந்து மரகதத்தின் உடலை மீட்டு சுந்தரத்தின் வீட்டிற்குக் கொண்டுவருகின்றனர். ரவியையும் இறந்து போன மரகதத்தையும் இணைத்து, இழிவாக சுந்தரம் பேசுவதைக் கேட்டுப் பொறுக்க முடியாத பூமாலை, நடந்த உண்மைகளை எல்லாம் சொல்கிறாள். மங்களபுரத்தில் தனது தோழியின் திருமண வீட்டில் தனக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றி பூமாலை சொல்வதைக் கேட்டவுடன், தன்னால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்ட பெண்தான் பூமாலை என்பதையும், தனது அக்காள் வளர்த்தது தன்னுடைய குழந்தையைத்தான் என்பதையும் உணர்ந்து, சுந்தரம் கண்ணீர்விட்டுக் கதறி அழுது, பிணமாகக் கிடக்கும் தனது அக்காளின் காலடியில் விழுந்து மன்னிப்பு கேட்டு, அழுது புலம்புகிறான். இறுதியில்... பூமாலையுடனும் தனது குழந்தையுடனும் சென்று, தனது அக்காளின் சிதைக்கு நெருப்பு மூட்டுகிறான்.



**“இறுதியில்... பூமாலையுடனும் தனது குழந்தையுடனும் சென்று, தனது அக்காளின் சிதைக்கு நெருப்பு மூட்டுகிறான்.”**

'பெண்ணே உன் கதி இது தானா? உன் பெண்மை ஆண்மைக்குப் பலி தானா?

உலகே உனக்குச் சுமைதானா?

உன் உடலே உனக்குப் பகைதானா?'

என்ற மாயவநாதன் எழுதி சிதம்பரம் எஸ்.ஜெயராமன் பாடும் உன்னதமான பாடல் ஒலிப்பதுடன் படம் நிறைவடையும்.

...காட்சி விரியும்

## திரைப்பட தணிக்கைத் துறையின் ஆர்.எஸ்.எஸ். பாசம்!

மக்களின் உணவு உரிமைகளில், ஆர்.எஸ்.எஸ். மற்றும் சங்கப் பரிவார கும்பல்கள் பெரும் குழப்பங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை அறிவோம். பாரதிய ஜனதா கட்சி ஒன்றிய ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னர், பல்வேறு தன்னாட்சி அமைப்புகளில் அந்த ஆர்.எஸ்.எஸ் பாசம் கொண்டோர் பதவிக்கு வந்து , இந்தியாவின் பன்மைத்துவத்தைக் கேள்விக்குள்ளாக்கி வருகின்றனர். அந்த வகையில், திரைப்படத் தணிக்கை வாரியம் தற்போது, திரைப்படங்களில் உணவு உண்பதைக் காட்டுவதிலும் கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கியிருப்பது, சர்ச்சைகளை உருவாக்கி உள்ளது.

மலையாள நடிகர் ஷேன் நிகாம் கதாநாயகனாக நடித்துள்ள படம், 'ஹால்'. இந்தப் படத்துக்குத் தணிக்கைச் சான்று வாங்க ஒன்றிய தணிக்கைத் துறைக்கு விண்ணப்பம் செய்துள்ளனர். ஆனால், படத்தில் 'பீஃப் பிரியாணி' சாப்பிடும் காட்சி மற்றும் அது தொடர்பான சில வசனங்களை நீக்க வேண்டும் என ஒன்றிய தணிக்கை வாரியம் கூறியுள்ளது. படக்குழு அதற்கு ஆட்சேபணை தெரிவித்ததால், தணிக்கைச் சான்று பெற முடியாமல் திட்டமிட்ட தேதியில் படத்தை வெளியிட முடியவில்லை.

இதையடுத்து, படக்குழு கேரள உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்திருந்த நிலையில், படத்தை நீதிபதி வி.ஜி.அருண் விரைவில் பார்க்க உள்ளதாக கூறியிருக்கிறார். குறிப்பாக, தன்னுடன் ஒன்றிய தணிக்கை வாரிய அதிகாரிகள் படத்தைப் பார்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார். தீர்வு எட்டப்படவேண்டும். தீர்ப்பு தணிக்கைத் துறைக்கு பாடமாக அமைய வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### 'ஆண்டியும் போண்டியும்' நாடகத்தில் நான்!



சாவல்பூண்டி சுந்தரேசன்

2003–04 ஆண்டுவாக்கில், தலைவர் கலைஞர் முரசொலியில் எழுதிவந்த 'ஆண்டியும் போண்டியும்' என்ற கதாபாத்திரங்களை வைத்து, கவிஞர் சிங்கார சடையப்பன், கவிஞர் நன்மாறன் ஆகியோர் நாடகம் நடத்திவந்தனர். விழுப்புரத்தில் நடைபெற்ற கழக மாநாட்டில், கவிஞர் நன்மாறன், தஞ்சை கூத்தரசன், குடியாத்தம் குமரன் ஆகியோருடன் நானும் நடித்தேன். சென்னையில் அந்த நாடகம் நடைபெற்றபோது, எல்லோரையும் பாராட்டிய இன்றைய கழகத் தலைவர் அவர்கள், “சாவல்பூண்டி சுந்தரேசன் கதாபாத்திரமாகவே மாறிவிட்டார்” என என்னைக் குறிப்பிட்டுப் பாராட்டினார். நாடகம் முடிந்ததும், தலைவர் தளபதி அவர்களோடு எடுத்துக் கொண்ட புகைப்படம், அப்போது சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த நடிகர் நெப்போலியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் செங்கை சிவம் ஆகியோரும் வருகைதந்து வாழ்த்தினர்.

**– சாவல்பூண்டி சுந்தரேசன், தலைமைக் கழகப் பேச்சாளர், திருவண்ணாமலை**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கழகத்தின் கொடி வாரம்!

1966-ஆம் ஆண்டு, பொதுத் தேர்தலுக்காக கழக நிதி திரட்டும் முயற்சியின் முதல் கட்டமாக பிப்ரவரி 20-ஆம் தேதி முதல் 27-ஆம் நாள் வரை 'கொடி வாரம்' கொண்டாடப்பட்டது. சென்னையில் நாவலர், நெல்லையில் கலைஞர், சேலத்தில் என்.வி.நடராசன், திருச்சியில் கே.ஏ.மதியழகன், கடலூரில் சத்தியவாணிமுத்து மதுரையில் பேராசிரியர், இராமநாதபுரத்தில் தில்லை வில்லாளன், கோவையில் டி.கே.சீனிவாசன் பெங்களூரில் அரங்கண்ணல் என கழக முன்னணித் தலைவர்கள் கொடி வாரத்தைத் துவக்கி வைத்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.